# சக்திஜோதியின் கவிதை வெளி

**முனைவர் அ.கா. அழகர்சாமி**
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகக் கல்லூரி, ஆண்டிபட்டி

**மலர்:** 3

**இதழ்:** 1

**தொகுதி:** 1

**மாதம்:** ஜூலை

**வருடம்:** 2018

**ISSN:** 2454-3993

கவிஞர் சக்திஜோதியின் முதல் ஐந்து தொகுப்புகளான நிலம் புகும் சொற்கள் (2008), கடலோடு இசைத்தல் (2009), எனக்கான ஆகாயம் (2010), காற்றில் மிதக்கும் நீலம் (2011), தீ உறங்கும் காடு (2012) ஆகிய கவிதைத் தொகுதிகளை முன்வைத்து அவரது கவிதை வெளியினை வெளிப்படுத்துகிறது இக்கட்டுரை. இவரது இந்த தொடக்ககாலக் கவிதைகளைக் காதல் கவிதைகள் என்கிற வகைமைக்குள் வகைப்படுத்தினாலும், அந்தக் காதலைச் சொல்வதற்கு அவர் தேர்ந்தெடுக்கும் மொழி சங்கக் கவிகளினுடையது. அவர் தமது காதலுணர்வை நெய்தல் திணையின் உரிப்பொருளான இரங்கலிலும், காமம் மிக்க கழிபடர் கிளவியாகவும், பிரிவாற்றி இருத்தலாகவும் வெளிப்படுத்துகிறார். இக்குரலானது சங்கப் பெண் கவிகளினுடையது. அவரே முதல் தொகுப்பில் தம்மை அறிமுகப்படுத்திக் கொள்வதைப்போல காதலுக்காக ஏங்கித் தவிக்கும் வெள்ளிவீதியின் குரலாகவும் இருக்கிறது. சக்திஜோதியின் கவிதைகள் வளமையான காதலைத்தான் பேசுகின்றன என்றாலும், அவை சங்க மரபுகளோடு இணைந்து ஒலிகின்றபொழுது புதிய பரிணாமத்தைப் பெறுகின்றன. முதல் தொகுப்பின் முன்னுரையில் பிரபஞ்சன் குறிப்பிடுவதைப்போல ஐந்து நிலங்களிலிருந்து எழும் சொற்களாகவே இவரின் கவிதைகள் தோற்றம் பெறுகின்றன.

சக்திஜோதியின் முதல் தொகுப்பு ‘நிலம்புகும் சொற்கள்’ காதலனைத் தேடி அவனது அன்பிற்குள் தன்னைக் கரைத்துக்கொள்ள விளையும் பெண்ணொருத்தியின் குரலாக ஒலிக்கிறது. வளமையான காதல் கவி மரபு இந்நிலையை ஆணிற்குரியதாக்கும். சக்திஜோதி கவிதைகளில் காதலியே காதலனை நோக்கிக் காதலால் கசிகின்றாள். எப்படியாவது தன்னைக் காதலனிடம் ஒப்படைத்துவிட வேண்டுமென்கிற தீராத தாகம் கொண்டுள்ளாள். அவளின் காதல் பித்தென்பது,

**“கொள்ளும் பயனொன்று இல்லாத” (நாச்சி. 13)**

என்ற ஆண்டாளின் குரலோடு ஒத்திசைவதாக உள்ளது.

**உன்னால்/வாடிக் கொண்டிருக்கும் என்னருகில் வந்தால்**
**உன்/மார்பில் முகம் புதைத்து /கைகளில் கட்டுண்டு**
**தீர்த்துக் கொள்ளப் போவது / என்/**
**நோயை மட்டுமல்ல**
**(நிலம் புகும் சொற்கள் ப. 53)**

என்ற வரிகள் ஆண்டாளின் மேற்சொன்ன பாடல் வரிகளோடு இணைகின்றன.

இத்தொகுப்பிலுள்ள கவிதைகள் பலவும் காதலன் முன் தன்னை

ஒப்படைக்க விளையும் காதலியின் துயர் நிறைந்த குரலாகவே வெளிப்படுகின்றன. காதலியின் தன்னிலையானது தலைவனுக்குத் தன்னை ஒப்படைத்து,அவனிடம் சரணடைவதன் வழியாகத்தான் அர்த்தம் பெறுவதாகக் கருதுகிறது. வேறுவகையில் சொல்வதென்றால் இத்தொகுப்பில் வெளிப்படும் பெண்ணின் குரல் சுயமற்ற குரல் என்று குறிப்பிடலாம். அவனின் நினைவுகளாலே அவள் அர்த்தம் பெறுகிறாள்.

**'உன் நினைவில் என்னிருப்பை உணர்கின்றேன';** **(நிலம்.49)**
என்ற கவிதை அவனிருப்பில் தன்னை உணரும் பெண்ணின் இருப்பை உணர்த்துகிறது.

**மின்னலை உதிர்க்கும் / உனது உரசல்களை**
**எனதுடல் தாங்காதெனினும் / பாலை வனத்தில்**
**உயிர்த்திருக்க மழை வேண்டித் / தவமிருக்கும் மலர்ச் செடியென**
**காத்திருக்கின்றது / அத்தருணத்திற்காக** **(நிலம். ப. 55)**

என்று காதலனின் தொடுதலுக்காகப் பாலைவனச் செடியெனத் தலைவி காத்திருக்கிறாள்.

இத்தொகுப்பினூடாக வெளிப்படும் பெண் மடம், நாணம் முதலிய பெண்மைப் பெருங்குணங்கள் கொண்ட மென்மையானவளாக வெளிப்படுகிறாள். எனவே அவள் மிகுந்த நாணத்தையும், அச்சத்தையும், தயக்கத்தையும் சுமந்து திரிகிறாள்.

**அனிச்ச மலரெனவிருக்கும் நான் / எப்படித் தாங்குவேன்** **(நிலம். ப.70)**
என தனது ஆற்றாமையை வெளிப்படுத்தும் அவள்,

**என்னுடன் / தனித்திருக்கும் நாணம் அச்சத்தோடு** **(நிலம். ப.45)**
என்று நாணத்தை அச்சத்தோடு சுமக்கிறாள்.

**நம் / சந்திப்பு நிகழும் போது / உரையாடவென**
**ஒத்திகை பார்த்துப் பார்த்து / சேமித்து வைத்திருந்த வார்த்தைகள்**
**விரல் வழி வழிந்து நிலம் புகுந்து மறைகின்றன (நிலம். ப. 67)**

எனத் தவிப்பும் தயக்கமும் கலந்து, சேர்த்து வைத்த சொற்கள் பயனற்று நிலம்புக காதலி செயலற்று நிற்கிறாள். இக்கவிதைகளில் வெளிப்படும் பெண் மனம் ஆணுக்காக ஏங்குகின்றது; தவிக்கின்றது; அவனில்லாத வாழ்வை நினைத்துத் துயருருகிறது.

அவனுக்குத் தன்னை ஒப்படைப்பதிலேயே மன நிறைவடைகிறது. அந்தவகையில் இக்கவிதைகளில் வெளிப்படும் பெண்ணின் தன்னிலையானது சுயமற்றதாக, ஆணின் ஆதரவில் முழுமையை உணரும் பலவீனமான ஒன்றாகத் தன்னை வெளிப்படுத்திக்கொள்கிறது.

இத்தொகுப்பிலுள்ள 'கடல்' என்று தலைப்பிடப்பட்டுள்ள கவிதை, தொகுப்பிலுள்ள பிற கவிதைகளுக்கு முற்றிலும் நேரெதிரான தளத்தில் இயங்குகின்றது. இக்கவிதையில் வெளிப்படும் பெண்ணின் தன்னிலையானது பலவீனமானதாக இல்லை. ஆணின் அரவணைப்பை எண்ணி ஏங்குவதாக இல்லை. மாறாக ஆணைத் தனக்குள் உள்ளடக்கியதாக வெளிப்படுகிறது. முந்தைய கவிதைகளில் ஆணின் அண்மைக்காக ஏங்கிய குரல் இக்கவிதையில்,

**என்னோடு / கலந்தால் / என்னை அறிந்து கொள்வது**
**எளிதென /உனக்குச் சொல்வதற்கு / ஒருவரும் 1 இல்லையா** **(நிலம். ப. 76)**

என்று ஆணை நோக்கிக் குரலுயர்த்துகிறது. ஆணை அறிந்துகொள்ள இயலாது தவித்த குரல் இங்கு 'நீ என்னை அறிந்து கொள்' என்கிறது. மனதிற்குள் இருந்த தயக்கத்தை, நடுக்கத்தை உதறியெறியும் இக்கவிதையின் நீட்சியாக இரண்டாவது தொகுதியிலுள்ள கவிதைகள் அமைகின்றன.

இரண்டாவது கவிதைத் தொகுப்பான ‘கடலோடு இசைத்தலில்’ காதலும், இயற்கையும் சேர்த்துப் பின்னப்பட்டுள்ளன. இன்னும்’ சொல்வதென்றால் இத்தொகுப்பில் இயற்கையைப் பாடும் கவிதைகளே மிகுதியாக உள்ளன. முதல் தொகுப்பைப் போன்று நம்பிக்கை வறட்சி இத்தொகுப்பில் இடம் பெறவில்லை. இத்தொகுப்பில் வெளிப்படும் பெண்ணின் தன்னிலையானது உறுதியானது தடுமாற்றம் இல்லாதது. முதல் தொகுப்பைப் போல ஆணின் அண்மைக்காக ஏங்கும் தவிப்பை இத்தொகுப்பில் காணமுடியவில்லை. மாறாக ஆணைத் தனக்குள் உள்வாங்கிக் கொண்ட பெண்ணை இத்தொகுப்பெங்கும் காணமுடிகிறது.

கடலோடு இசைத்தலில் வெளிப்படும் பெண்ணின் குரல் உறுதிப்பாடு மிக்கதாய் உள்ளது.

**நான் எனது சொற்களால் ஆனவள் / எனது விரல்களிலிருந்து கசிவது**
**என் இரத்தம் / அது என் முதுகுத் தண்டில் உற்பத்தியாகி**
**உலகெங்கும் பரவுவது / நான் பெண் / நிலவல்ல**
**நான் உயிர்ப்புடனிருப்பவள் / நிலவல்ல**
**ஆயிரம் சூரியன்களைப் பெற்றெடுக்கும் பெண் (கடலோடு இசைத்தல், ப.41)**

என்று இக்கவிதையில் வெளிப்படும் பெண் தான் நிலவல்ல என்றும், தனது சொற்களால் ஆகிய தன்னால் ஆயிரமாயிரம் சூரியன்களைப் பெற்றெடுக்க முடியுமென்றும் அதிரடியாய் அறிவிக்கிறாள். காலம் காலமாய்ப் பெண்ணை நிலவு என்றும், ஆணைச் சூரியனென்றும் சொல்லி வந்த ஆணாதிக்கச் கருத்தியலை இக்கவிதைப் பெண் உடைத்தெறிகிறாள். இவ்விதமான அதிரடியான, முதிர்ச்சியான சொல்லை முதல் தொகுப்பில் காணவியலாது. தன்னுடைய சுயத்தைத் தேடியடைந்த உறுதிமிக்க பெண்ணின் குரல் இது. சக்திஜோதி கவிதைகளின் முதல் கட்ட நகர்வாக இதனைக் கருதலாம். பெண் பேசுவதற்குக் கூட உரிமையற்றவளாக உள்ளாள். ஆனால் இக்கவிதையில் வரும் பெண்,

**உனக்கான / சொல்லைத் தேர்ந்தெடுத்து விட்டேன்**
**தீர்ந்து போகவே முடியாதது இச்சொல் (கடலோடு. ப. 53)**

என்கிறாள். காதலனிடம் பேசுவதற்குச் சொற்களிழந்து நிற்கும் நிலை மாறி, இங்கு உனக்கான சொற்கனை நானே தேர்ந்தெடுத்துவிட்டேன் என்கிறாள் காதலி.

சென்ற தொகுப்பில் வெட்கத்தையும், தயக்கத்தையும் தூக்கிச் சுமந்த காதலி இங்கு அதனை, நீ அறியாமல் காலணிகளுடன் கூடவே எடுத்துச் செல்கிறாய்

**ஒவ்வொரு பருவங்களிலும் / நான் / என் பாதங்களில் இட்ட முத்தங்களையும்**
**கழற்றியெறிந்த வெட்கத்தையும் (கடலோடு. ப. 23)**

என விட்டெறிகிறாள்.

முதல் தொகுப்பில் காதலனின் நினைவுகளைச் சுமந்துகொண்டு காதலி துயர்படுகிறாள். இத்தொகுப்பில் அந்நிலை காதலனுக்கு இடம் மாற்றப்படுகிறது. காதலனே காதலியின் நினைவுகளைச் சுமந்துகொண்டு துயர்படுகிறான். காதலியின் காலணியின் வழியே அவளின் நினைவுகளைப் பகிர்ந்துகொள்ளும் காதலனை,

**என் நினைவாக நீ எடுத்துச் சென்ற / ஒற்றைக் காலணியை**
**எப்படிக் கண்டுபிடித்தாய் /ஒற்றை மனசென**
**அதைக் கையில் வைத்து அழகு பார்க்கிறாய் (கடலோடு. ப. 23)**

என்று சக்திஜோதி வெளிப்படுத்துகிறார். காதலனின் வரவிற்காக காத்திருக்கும் காதலியின் பாத்திரத்தை இங்குக் காதலன் ஏற்றுக்கொள்கிறான்.

மேலும் காதலனைத் தனக்குள் உள்வாங்கிக் கொண்டு, அவனைத் தனது விரும்பம் போல் வடிவமைப்பவளாகக் காதலி மாறுகிறாள். அவன் அவளின் கைப்பாவையாகிறான். அவளின் முன்பு அவன்,

**முதிர்ந்த மரத்தின் / மரப்பட்டைகள் உதிர்வது போல**
**அவனது காலம் மடிகிறது / அவள் முன்**
**ஆம்பலின் சுகந்தம் கொண்ட இதழ்களால்**
**அவனை உயிர்ப்பிக்கிறாள / மரணம் உறுதியான பிறகும்**
**உயிர்ப்பிக்கும் கலையை அறிந்தவளிடம் வேண்டுகிறான் (கடலோடு. ப. 56)**

என்று நிர்க்கதியாகி நிற்கிறான். பிறகு அவளே அவனை உயிர்ப்பிக்கிறாள்.

இயற்கையைப் பாடும் கவிதைகள் இத்தொகுப்பில் சரிபாதி இடத்தை பெற்றுள்ளன. தண்ணீர், கடல், காற்று, வானம், பனி, பறவை, மஞ்சள் நிறப் பூக்கள் என்று இயற்கையைப் பற்றிய வளமான சித்திரம் இத்தொகுப்பெங்கும் நிறைந்து நிற்கிறது.

**தூரத்தில் பறக்கின்ற / இரண்டு வெண்கொக்குகள்**
**நெடிய தருணங்களை / தன் இரையென தூக்கிச் செல்கின்றன**
**மஞ்சள் நிறப் பூக்கள் பூத்திருக்கின்ற**
**நிலத்திற்கு (கடலோடு. ப. 59)**

என்ற கவிதை இயற்கை பற்றிய காட்சிப் படிமத்தை வழங்குகிறது. மஞ்சள் நிறப் பூக்கள் பூக்கும் நிலமென்பது கவிஞரின் கற்பனை செய்யப்பட்ட கனவுலக தேசமாக விரிகிறது.

முதல் தொகுப்பில் வெளிப்பட்ட குழப்பமானதும், தவிப்பு மிக்கதுமான தன்னம்பிக்கையற்ற தன்மையினைக் கவிஞர் இத்தொகுப்பில் கடந்துவிடுகிறார். இன்னும் சொல்வதென்றால் அதற்கு எதிரிடையான உறுதியான தன்னிலையைப் பெறுகிறார். காதலனின் அண்மைக்காக ஏங்கிய கவிமனம் இத்தொகுப்பில் அவனைத் தனக்குள் உள்வாங்கிக் கொள்கிறது. இங்குக் காதலனே தன்னிலையற்றவனாகிறான்.

மூன்றாம் தொகுப்பான ‘எனக்கான ஆகாயம்’ அவனுடனான கொள்வினை∴. கொடுப்பினை பற்றிப் பேசத் தொடங்குகிறது. அவள் அவனைத் தன்னுடைய சகபயணியாக ஏற்றுக் கொள்கிறாள். அவனுக்கும் தனக்குமான இடைவெளியைப் பரஸ்பரம் பேசித் தீர்த்துக்கொள்ள விளைகிறாள். அவனுக்கும் தனக்குமான உறவை ஆண்டான்-அடிமை நிலையிலிருந்து மாற்றித் தோழன் - தோழி என்ற நிலைக்குச் சமப்படுத்துகிறாள். அவன் அணுகப்பட இயலாதவன் என்ற நிலையை மாற்றி அவனை விவாதத்துக்கு உட்படுத்துகிறாள். தனக்கு நிகரான சகபயணியாக அவனை மாற்றுகிறாள். இத்தொகுப்பிலுள்ள கவிதைகள் யாவும் அவளும் அவனும் தனக்கிடையிலான இடைவெளியைக் “கடந்து” ஒன்றிணைவது குறித்தே பெருமளவில் விவாதிக்கின்றன.

இத்தொகுப்பிலும் முந்தையதைப் போல அவனுக்காக ஏங்கும் ஏக்கங்கள், அவளுக்குள் அடங்கிய அவனைப் பற்றிய பதிவுகள்,

**அவளால் / அவனது பொழுதுகள் முழுமையடைந்திருந்தன (எனக்கான ஆகாயம். ப.62)**

என்று தொடர்கின்றன. இருப்பினும் இத்தொகுப்பில் மிகவும் முக்கியமாகக் காணக் கிடைப்பது அவனுக்கும் அவளுக்குமான இடைவெளியைக் கடத்தல் பற்றியதாகும். முந்தைய தொகுப்புகளில் அவனுக்குள் அடங்கியும்,அவனை உள்ளடக்கியும் சிந்தித்த கவிமனம் இத்தொகுப்பில் அவனைத் தனது சகபயணியாக ஏற்றுக்கொண்டு அவனுக்கும் தனக்குமான இடைவெளியை உடைத்தெறிவது பற்றிய உரையாடலைத் தொடங்குகிறது.

இதனால் அவள் அவனுக்கும் தனக்குமான இடைவெளியை எவ்வாறாவது கடந்துவிட வேண்டுமென்கிற ஆவலை அவள் தொடர்ந்து வெளிப்படுத்திக்கொண்டே இருக்கிறாள்.
உன்னைக் கடக்க வேண்டுமென்ற தயக்கத்தில்

**பனித்துண்டுகளைத் தட்டிவிட்டபடி / நின்றிருந்தேன்**
**மஞ்சள் நிற வெளிச்சத்தில் / உன் பார்வையை அறியமுடியவில்லை**
**அல்லது / என்னைத் தவிர்க்கிறாயா / என்பதும் தெரியவில்லை (என. ப.53)**

என்ற கவிதையில் அவனுடனான உரையாடலை நிகழ்த்தி, அவனுக்கும் தனக்குமான இடைவெளியைக் கடக்க வேண்டுமென்ற விருப்பத்தை அவள் வெளிப்படுத்துகிறாள்.

மேலும் இடைவெளி, பனிப்பொழுதைக் கடந்து, கடந்து செல்லும் காலம் ஆகிய கவிதைகளின் தலைப்பும்,

**நான் மிதந்து கடக்கிறேன் (43)**
**நம்மை நாமே கடந்து கொண்டிருக்கிறோமா (45)**
**அந்த விழிகளைக் கொண்டு கடந்து வந்திருக்கிறேன் (5)**
**கடந்து கொண்டிருக்கிறோம் (67)**

என்ற கவிதைகளின் வரிகளும் கடத்தல் பற்றியே பேசுகின்றன. இவை அவனுக்கும், அவளுக்குமான இடைவெளியை மீண்டும்மீண்டும் உரையாடலாக்கிக் கடந்து செல்ல விளைகின்றன.

முதல் இரண்டு தொகுப்புகளிலும் சங்க மரபுகளின் தாக்கம் பெற்ற கவிதைகள் உள்ளன. இருப்பினும் அவை வலுவான வீச்சைப் பெறவில்லை. ஆனால் இத்தொகுப்பில் சங்க மரபானது செறிவான தாக்கத்தை ஏற்படுத்தி சங்கப் பாடல்களின் தாக்கம் பெற்ற கவிதைகள் என்ற தனித்த வகைமையாக மலர்கின்றன. காளான் பூக்கும் பருவம், வனத்தின் குரல், குளத்து நீர், காற்றில் அசையும் கனவு, மயில் அகவும் ஆகிய கவிதைகள் சங்கப் பாடல்களின் வீச்சை நவீன கவிதை மொழிகளுக்குள் கொண்டு வருகின்றன.

**பலா வெடித்து / தேனீக்கள் ரீங்காரமிடுகின்றன**
**வனமெங்கும் அதன் வாசைன /உன் அருகாமையை நினைவூட்டுகிறது**
**மரக்கிளைகளில் அமர்ந்திருக்கும் பறவைகள் /நம்மை ஏளனம் செய்வது**
**வனமெங்கும் ஒலிக்கிறது /குளம் தளும்பிக் கொண்டிருக்கிறது (என. ப. 40)**

என்ற இக்கவிதை காதல் நோயால் கசிந்துருகும் பெண்ணின் ஏக்கம் தோய்ந்த குரலாக ஒலிக்கிறது. இக்கவிதையில் ஒலிக்கும் பெண்ணின் குரல் “வேரல்வேலி வேர்க்கோட் பலவின்”(குறுந்.18) என்ற குறுந்தொகைப் பாடலில் ஒலிக்கும் தலைவியினுடையது. இக்கவிதையின் இறுதியில் வரும் ‘குளம் தளும்பிக் கொண்டிருக்கிறது’ எனும் வரி மேற்சொன்ன குறுந்தொகைப் பாடலின்’ ‘சிறுகோட்டுப் பெரும்பழம் தூங்கியாங்கு இவள் ∴உயர்தவச் சிறிது காமமோ பெரிதே’ என்ற அடிகளின் நவீன கவிதை வடிவமாக அமைகிறது. இவ்வாறு இரண்டாயிரம் ஆண்டுகளைக் கடந்த கவிதை வரிகளின் பாடுபொருளை அதன் செம்மை குறையாது நவீன கவிதை வடிவத்திற்கு மாற்றியிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

பெண்ணிலைவாதம் பேசும் கவிதைகள் முந்தைய தொகுப்புகளைவிட இத்தொகுப்பில் கூர்மையடைகின்றன. சமையலறை உலகிலிருந்து, மீண்டெழுதல், பரிமாணம், தோழியொருத்தியின் குரல் ஆகியன பெண்கள் சந்திக்கும் பிரச்சனைகள் பற்றிய தீவிரமான கருத்துக்களை முன்வைக்கின்றன.

**உங்களில் யாருக்கேனும் / என்பெயர் நினைவிலிருக்கும்**
**கூடவே /வகுப்பறையில் / உதிரம் பெருகி பூப்பெய்தியதும்**
**உங்களிடமிருந்து நான் / மௌனமாக விலகிச் சென்றதும் (என. ப.49)**

என்கிற கவிதை பூப்பெய்திய பெண்ணின் துயரம் பற்றிப் பேசுகிறது. வளரிளம் பருவத்தில் நிகழும் இந்த உடல் மாற்றத்தினால் பெண்கள் குற்றவுணர்வால் பீடிக்கப்பட்டுத் தனக்குள் ஒடுங்கிப் போதலை இக்கவிதை கவனப்படுத்துகிறது.

நிலவும் ஆணாதிக்கச் சமூகத்தில் பெண்ணுக்கானவை யாவும் ஆண்களால் படைத்தளிக்கப்பட்டவைகளாக உள்ளன. எனவே பெண்ணின் சுயம் பறிக்கப்பட்டதான பரிதவிப்பை,

**நான் பெண்ணாய்ப் பிறக்கும் போது / பறித்துக் கொண்டார்கள்**
**அல்லது செயலிழக்கச் செய்தார்கள / கால்களை**
**கரங்களை / கண்களை / செவிகளை / நாவை / புலன்களை**
**மேலும் பார்க்கவியலாத சிறகுகளை (என. ப.33)**

என்ற கவிதை விளக்குகிறது. எல்லாமும் பறிக்கப்பட்ட பெண் தனது சுயத்தை இழந்து நிற்பதை இக்கவிதை விவரிக்கிறது. இவ்வாறு சுயத்தை இழந்த பெண்ணின் துயர் மிக்க குரலாகவும் அதிலிருந்து மீண்டெழ விரும்பும் குரலாகவும் பெண் பற்றிய கவிதைகள் அமைகின்றன.

அவனுக்கும் அவளுக்குமான இடைவெளியை உரையாடலின் வழி கடத்தல், சங்கச் செவ்வியல் மரபை நவீன கவிதை வெளிக்குள் கொண்டு வருதலென ஒரு நிலையான இடத்தை இத்தொகுப்பில் சக்திஜோதியின் கவிதைகள் பெறுகின்றன. வேறுவகையில் சொல்வதென்றால் சக்திஜோதியின் கவிதைகள் முதலிரண்டு தொகுப்புகளில் வளர்ச்சியைப் பெற்று இத்தொகுப்புகளில் ஸ்திரத்தன்மையைப் பெறுகின்றன.

நான்காம் தொகுப்பான 'காற்றில் மிதக்கும் நீலத்தில்' அகவெளி சார்ந்த கவிதைகளிலிருந்து நீங்கி, புறவெளி சார்ந்த கவிதை வெளிக்குள் கவிஞர் நுழைகிறார். பெண்ணிலைவாதம், சமூகம் சார்ந்த பிரச்சனைகள் முதலியவை சார்ந்த கவிதைகளோடு, காதலைப் பேசும் இயற்கை சார்ந்த கவிதைகளும் இத்தொகுப்பில் இடம் பெறுகின்றன. முதல் மூன்று தெகுப்புகளில் தன்னிலை சார்ந்து தனக்குள்ளாகவே உரையாடல் நிகழ்த்திய கவிமனம், இத்தொகுப்பில் உறுதிப்பட்ட தன்னிலை பெற்றதாய் புறவெளியை நோக்கி நகர்கிறது. இத்தொகுப்பில் முதன்மைபெறும் புறவெளி சார்ந்த கவிதைகள் இதனை உறுதி செய்கின்றன.

முந்தைய தொகுப்புகளில் அதிகம் கவனப்படுத்தப்படாத சமூகப் பிரச்சனைகள் சார்ந்த பல விசயங்கள் இத்தொப்பில் முதன்மை பெறுகின்றன. பாலஸ்தீன மக்களின் துயர் சுமந்த வாழ்க்கையை,

**மேற்குச் சுவரை விட்டு வெளியேறுகிறேன், சுவரில் படிந்த கண்ணீர்த்துளி**
**உடல் மீது, தழும்பாய் நெளிந்து கொண்டிருக்கிறது. (காற்றில் மிதக்கும் நீலம் ப. 20)**

என்ற கவி வரிகள் வெளிப்படுத்துகின்றன.

தமிழர்களின் தென்மையான வரலாற்றினைப் பேசுபவை தொல்லியல் சின்னங்கள். ஆனால் அதனைப்பற்றிய எவ்விதமான புரிதலும்இல்லாது தமிழர்களே அவைகளை முன்னின்று சிதைக்கும் பணியையும் செய்கின்றனர். தொன்மையான தமிழ் பிராமி கல்வெட்டு உள்ள அரிட்டாபட்டி குடைவரைக் கோவில் சிதைக்கப்படுதலை,

**அரிட்டாபட்டி குடைவரைக் கோவிலின் / புடைப்புச் சிற்பங்களின் தொன்மம்**
**எதிர்காலத்தில் பாழ்பட்டு விடுமென / பேசிக்கொள்கிறார்கள்**
**வயோதிக உழவர்கள் (காற் .ப. 18)**

என்ற கவிதை வெளிச்சப்படுத்துகிறது. கிரானைட் கொள்ளையர்களால் தொல்லியல் சின்னங்கள் சிதைக்கப்பட்டு வரும் சமகாலச் சூழலில் இக்கவிதை கவனத்திற்குரியதாகிறது.

இத்தொகுப்பில் இரண்டாமிடம் பெறும் கவிதைகள் பெண்ணிலைவாதம் பேசும் கவிதைகள். பெண்ணிற்கான பிரச்சனைகள் பாட்டி, மகள், பேத்தி என்று தொடர்கின்றன. இப்பிரச்சனைகள் தனித்த ஒரு பெண்ணை மட்டும் பாதிப்பதில்லை. அவை தலைமுறைகளின் வழியே தொடர்கின்றன. பெண்ணுடல் மீது ஆணாதிக்க விழுமியங்கள் செலுத்தும் வன்முறையைக் கடந்து தாயைப் போலவே அவளது மகளும் வந்துள்ளாள். இவ்வாறு துன்பங்களைக் கடந்து தாயான மகளின் நிலையை,

**அவள் நம்மை அறியாமலேயே / அவளைக் கடந்திருக்கிறாள்**
**இப்போது ஒரு மகளுக்கு சொந்தக்காரியாக / நாம் பட்ட கஷ்டங்களோடு (காற். ப.75)**

என்ற கவிதை வெளிப்படுத்துகிறது.

ஆணிற்கான இவ்வுலகில் பெண்ணிற்கான இடமென்பது இரண்டாம் நிலைப்பட்டதே. பெண்ணின் இருப்பை இவ்வுலகம் அங்கீகரிப்பதில்லை. இந்தப் புறக்கணிப்பின் வலியைக் கவிஞர் வாகை மரத்தினோடு ஒப்பிட்டு,

**வாகையும் நானும் ஒருபோதும் / நிழலுக்காகவோ பூக்களுக்காகவோ**
**வளர்க்கப்படவில்லை / என்றறிந்த ஒருவன்**
**வாகை மலரைச் சூடிக்கொள்ளும் இரவில்**
**நிராகரிப்பின் வலி மறந்து பெருமையடைவேன் (காற். ப.76)**

என்ற கவிதையில் உணர்த்துகிறார். முந்தைய தொகுப்புகளில் காதலுக்காக ஏங்கிக்கசிந்து கொண்டிருந்த கவியின் குரலானது, இத்தொகுப்பில் தனக்கான பிரச்சனைகளை உணர்ந்து அதைச் செறிவான கவிதையாக மாற்றுகிறது.

'கோடைகால ஆற்றங்கரையில்' என்னும் கவிதை அவனின் பிரிவைக் கூழாங்கல், நீர், மீன், பறவை, நீர்ப்பாசிஇ நீர்ச்சுழல் என்று நீர்ச்சூழலோடு விளக்குகிறது.

**கூழாங்கற்கள் / நிறைந்து கிடக்கும் ஆற்றுப்படுகையில்**
**மாலை வேளையில்/சந்தித்துக் கொள்கிறோம்.......**
**நீ விலகிச் செல்கிறாய்/என் சொல்லையோ அல்லது**
**என்னையோ எடுத்துக் கொண்டு /உன் நிழலை என் நிலத்தில் விட்டுவிட்டு (காற்.ப. 25)**

என்று இக்கவிதை குறிப்பிடும் அவனின் பிரிவானது களவுக் காலத்தில் குறியிடத்தே தலைவியைப் பொய்ச் சூளுரைத்துப் புணர்ந்து மீளும் தலைவனை நினைவூட்டுகிறது. இக்கவிதை,

**யாரும் இல்லை தானே கள்வன்**
**தானது பொய்ப்பின் யானெவன் செய்கோ? (குறுந். 25)**

என்று பொய்ச் சூளுரைத்துப் புணர்ந்து சென்ற தலைவனைப் பற்றிய நினைவுகளைக் குருகினூடே மீட்டெடுக்க முயலும் தலைவியின் கூற்றிலமைந்த குறுந்தொகைப் பாடலின் நவீன கவிதை மொழிபெயர்ப்பு எனலாம். 'நினைவின் சுவை' என்கிற கவிதையில் வண்டுகளின் ரீங்காரம, தினைச்செடி, மூங்கில், தென்றல் ஆகியவை ஒன்றிணைந்து 'நலிவின்' பாடலை இசைக்கின்றன. காதலால் நசிந்து போயிருக்கும் அவளுக்கு இது நலிவைத் தருவதாக அமைகிறது. காதலால் நலியும் அவள் இறுதியில்.

**மழையில் நனைந்த /தினைச் செடிகளில் மலரும் சிரிப்பை**
**அவனிடம் /நினைவூட்டினால் தான் என்ன (காற். ப.52)**

என்கிறாள். தினைச் செடிகளில் மலரும் சிரிப்பை நினைவூட்டச் சொல்வது இறைச்சிப் பொருளாகிறது. இவ்வாறு சங்கப் பாடல்களின் பாடுபொருளானது நவீன மொழி அழகியலுடன் இத்தொகுப்பில் இடம்பெறுகின்றது. காதல், இயற்கை, சமூகம் என்பனவற்றின் சம கலவையாகக் 'காற்றில் மிதக்கும் நீலம்' அமைகிறது.

கவிஞரின் ஐந்தாவது தொகுப்பான ‘தீ உறங்கும் காடு’ ஐம்பூதங்களில் ஒன்றான நெருப்பின் பெயர் தாங்கி வெளிவந்துள்ளது. முந்தைய தொகுப்புகளில் பேசப்பட்ட காதல், பெண்ணிலை வாதம், சங்க மரபுசார் கவிதைகள் இத்தொகுப்பிலும் அப்படியே தொடர்கின்றன. இத்தொகுப்பில் வர்ணனை, படிமம், குறியீடு நிறைந்த கவித்துவம் மிக்க வரிகளின் ஆட்சி மிகுந்து கவிதைகளின் செறிவையும், அழகியலையும் மிகுதிப்படுத்துகின்றன. இது முந்தைய தொகுப்புகளில் அதிகமும் காணப்படாத சிறப்பம்சமாகும்.

முந்தைய தொகுப்புகளில் உள்ளதைப்போல இத்தொகுப்பிலும் அவனுக்கான ஏக்கம் தொடர்கிறது. அவனைப் பெற்றுத் தன்னைத் தேற்றிக்கொள்ளும் காதல் மனத்தின் துடிப்பு,

**என் தனித்த நாட்களின் இரவு / கடந்து கொண்டிருக்கிறது**
**ஒளிர்தல் ஏதும் அற்று (தீ உறங்கும் காடு ப.71)**

என்று தொடர்கிறது. காதல் கவிதைகளைவிடவும் பெண்ணியப் பிரச்சனைப்பாடுகளைப் பேசும் கூர்மையான கவிதைகள் இத்தொகுப்பில் பெருமளவில் இடம் பெற்றுள்ளன. இது கவிஞரின் பெண்ணிய நோக்கிலான அடுத்தகட்ட நகர்வை குறிப்புணர்த்துகிறது. பெண்ணை உலகைப் படைத்துக் காக்கும் ஆதிசக்தியாகக் கருதும் கவிமனம் அவள் உடுத்தியிருந்த தலைமுறைகளின் பேறுகாலக் குருதி படிந்த ஆடையைத் தேடுகிறது. அதன் வழி பெண்ணின் ஆதி அடையாளத்தை மீட்டெடுக்கும் முயற்சி முன்னெடுக்கப்படுகிறது.

‘அர்த்தநாரி’ எனும் கவிதை வீடு, பணியிடம் என்று இருவேறு தளங்களில் பணியாற்றும் பெண்ணின் இருப்பை,

**வீடு / மீண்டும் அவளைப் பெண்ணாக மாற்றியது**
**தாய்மையின் வாஞ்சையுடன் / பிள்ளைகளுக்காகக் காத்திருக்கிறாள்……**
**பால்குக்கரின் விசில் சப்தத்தில் / மூளை நரம்பொன்று அதிர்கிறது**
**நாளைய பணிக்கெனக் காத்திருக்கும் குறிப்புகள்**
**இன்னொரு நரம்பில் ஊடுருவிப் பாய்கிறது / குளியலறையிலிந்து**
**நீங்கும் அவள் வேறு ஒன்றாகத் தெரிகிறாள் (தீ. ப.64)**

என்று இக்கவிதை உணர்த்துகிறது. ஆணிற்குப் பணியிடத்தில் மட்டும்தான் வேலை. ஆனால் பெண்ணிற்குப் பணியிடம், வீடு என இரு இடங்களிலும் பணிப்பளு உள்ளது. பணியிலிருந்து திரும்பும் பெண்ணின் மூளை நரம்புகளில் அடுத்த நாளின் பணி பற்றிய சிந்தனைகள் பற்றியழுத்த அவள் வேறொரு பெண்ணாக மாறிப் போவதை இக்கவிதை விவரிக்கிறது.

நீண்ட கருமையான கூந்தல் பெண்களுக்கு அழகானது என்கிறது ஆணாதிக்கச் சமூகம். கூந்தல் பராமரிப்பில் நாளின் பெரும் பகுதியைப் பறிகொடுக்கும் பெண்களுக்கு அது அழகாய்த் தெரிவதில்லை. எனவே கவிஞர் கூந்தல் எனக்குச் சுமை என்கிறார்.

**எனக்கு மெல்லிய கூந்தல் எனச் சொல்லுவான் / நான் கூந்தலினாள் ஆனவள் அல்ல**
**அது எனக்குச் சுமை / அவன் விரும்புகிறான் என்பதாலேயே**
**சுமக்க முடியாத இந்தக் கூந்தலை / சுமந்து கொண்டிருக்கிறேன் (தீ. ப. 67)**

பெண் கூந்தலால் ஆனவள் மட்டுமல்ல. அவளுக்கு அறிவும் உணர்வும் இருக்கிறது என்பதை இக்கவிதை வலியுறுத்துகிறது. ஆணின் விருப்பத்திற்காகவே நான் கூந்தலைச் சுமந்து திரிகிறேன். அது எனக்குச் சுமை என அறிவிப்பது புரட்சிகரமான சிந்தனையாகும்.

இத்தொகுப்பில் சங்கம்சார் கவிதைகள் உச்சத்தைத் தொடுகின்றன. ‘காத்திருத்தலின் மலர்ச்சி’ கவிதையில் நெய்தலும் அதன் கருப்பொருளும் செறிவான நவீன கவிதையாகத் தோற்றம் பெறுகின்றன.

**அந்தக் கடல் கிராமத்தில் / மீன்களை உப்பிட்டு**
**உலரச் செய்து கொண்டிருப்பாள் / அவள் / மேலும்**
**ஓயாத இரைச்சலிடும் கடற்பறவைகள் /அலைகளின் சப்தத்தில்**
**உறைந்து போகாது / கிடக்கிறது / வானத்துச் செந்நிறம்**
**காதலை நினைத்தபடி (தீ. பக்.30-1)**

என்று இக்கவிதையில் நெய்தல் நிலம் காட்சிப்படுத்தப்படுகிறது. இக்கவிதையில் தொழிற்படும் மீன், உப்பு, இரைச்சலிடும் கடற்பறவை ஆகியன நெய்தல் நிலப்பரப்பை கண்முன் விவரிப்பதோடு அந்நில உரிப்பொருளான பிரிவாற்றியிருத்தலையும் உணர்த்துகின்றன. ‘நெடுநல்வாடை’ கவிதையில் வரும்,

**செம்போத்தின் பாடலைக் கேட்கிறேன் /அது**
**வசந்தம் வரும் என்றே சொல்கிறது**
**என் முகத்தை / நீர்த் தளத்தில் பார்க்கிறேன் /அது**
**அத்தனை அழகாய் ஒளிர்கிறது /அவன் /வந்து விடுவான் (தீ. பக். 100-1)**

என்ற பெண்ணின் குரல் ‘நெடுநல்வாடையில’ வாடைக் காற்றால் நலிவுறும் தலைவியின் குரலாக ஒலிக்கிறது.

காதல் அனுபவங்களைக் கடந்து சமூகம் சார்ந்த பிரச்சனைகளைப் பேசக் கூடிய ‘காலம் பறித்த கசப்புச்சுவை’ இத்தொகுப்பிலுள்ள முக்கியமான கவிதைகளுள் ஒன்றாகும். மிகுதியான அளவில் காதல் அனுபவத்தை மட்டுமே பாடக்கூடியவர் சக்திஜோதி என்கிற பார்வையை மறுக்கும்விதமாக, அற்புதமான அழகியலுடனும், ஏகாதிபத்தியச் சாடலுடனும் அவர் இக்கவிதையைப் படைத்துள்ளார். தமிழ்ப்பண்பாட்டு அடையாளமான வேம்பை இன்றைய உலகமயச் சூழலில்இழந்து நிற்பதை இக்கவிதை பேசுகிறது. கரிசல் பெண், கசப்பின் தேவதை என்று வேம்பை வர்ணிக்கும் இக்கவிதை, தெய்வமாக வணங்கப்படும் வேம்பானது நிலம் நகர்த்தி எடுத்துச் செல்லப்பட்டதை,

**என்னுயை அலட்சியத்தினால் / நிலம் நகர்த்தி எடுத்துச் செல்லப்பட்டாள்**
**கசப்பின் சிறு தேவதை / இன்று / தனக்கு உரிய**
**கரிசல் மண் பறிக்கப்பட்டு விட்ட / தன் பெருந்துயரம் சொல்லி**
**கையசைக்கிறாள் (தீ. ப. 109)**

என்று பதிவு செய்கிறது. இக்கவிதை வேம்பைத் தனது தோழியாகக் கருதி அதனை இழந்த பெண்ணொருத்தியின் கையறுநிலைப் புலம்பலாக நீள்கிறது.

அசாத்தியமான கவித்துவ இன்பத்தைத் தரும் இவ்வரிகள் சக்திஜோதி கவிதைகளின் புதிய பரிமாணத்தை எடுத்துரைக்கின்றன. முந்தைய தொகுப்புகளில் ஸ்திரத்தன்மையை அடைந்த கவிமனம் கவி நுட்பத்தில் கவனம் செலுத்தும் அடுத்த கட்ட வளர்ச்சியாக இதனைக் கருதலாம். காதல் கவிதைகள் மட்டுமின்றி பிற கவிதைகளுக்குப் பிரதான இடமளிக்கப்பட்டு ஒருவித சமநிலைத் தன்மையுடன் இத்தொகுப்பு உள்ளது.

சக்திஜோதியின் ஐந்து கவிதைத் தொகுப்புகளும் சீரான தொடர்ச்சியான வளர்ச்சியைப் பெற்றனவாக உள்ளன. முதல் தொகுப்பில் குழப்பமான தன்னிலையுடன் தனது பயணத்தைத் தொடங்கிய சக்திஜோதியின் ‘அவள்’ இரண்டாம் தொகுப்பிலேயே உறுதியான தன்னிலையைப் பெறுகிறாள். மூன்றாம் தொகுப்பில் தனக்கும் அவனுக்குமான இடைவெளியை உரையாடலாக்கிக் கடந்து செல்லும் அவள்இ நான்காம் தொகுப்பில் நிலையான இடத்தைப் பெறுகிறாள். ஐந்தாம் தொகுப்பில் சமூகப் பார்வையோடு தனது அடுத்த கட்ட நகர்வைத் தொடங்குகிறாள். சக்திஜோதியின் கவிதை வெளியெங்கும் வியாபித்து நிற்பது காதலாகும். சக்திஜோதியின் அவள் அவனுக்காக ஏங்குகிறாள், இரங்குகிறாள், பிரிவாற்றியிருக்கிறாள். ஆனால் அவர் காதலுக்குள் மட்டும் சுருங்கிவிடாது தனது கவிப் பயணத்தை விரிந்தளவில் தொடங்கி நடத்திச் செல்கிறார். இதனை அவரது கவிதைகளில் அழுத்தமாகவும், தீவிரமாகவும் செயலாற்றும் சமூகம், பெண்ணிலைவாதம், சூழல்சார்

பிரச்சனைகளை வலியுறுத்தும் கவிதைகள் வெளிப்படுத்துகின்றன. இவ்வாறு சக்திஜோதியின் கவிதை வெளியானது பல்வேறு தளங்களில் பயணப்படுகிறது.

**உதவிய நூல்கள்**

1. சக்திஜோதி, நிலம்புகும் சொற்கள். உயிர் எழுத்து பதிப்பகம், திருச்சி, 2008.
2. சக்திஜோதி, கடலோடு இசைத்தல், உயிர் எழுத்து பதிப்பகம், திருச்சி, 2009.
3. சக்திஜோதி, எனக்கான ஆகாயம், உயிர் எழுத்து பதிப்பகம், திருச்சி, 2010.
4. சக்திஜோதி, காற்றில் மிதக்கும் நீலம், உயிர் எழுத்து பதிப்பகம், திருச்சி, 2011.
5. சக்திஜோதி, தீ உறங்கும் காடு, உயிர் எழுத்து பதிப்பகம், திருச்சி, 2012.